இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 133 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 08 – செவ்வாய்க்கிழமை 23 டிசம்பர் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 133 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 08 - Tuesday 23 December 2025 - Dak 16 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.12.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அமைக்கப்பட்டுள்ள கழகத்தின் தேர்தல் அறிக்கை குழுவின் தலைவர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, உறுப்பினர்கள் செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர்கள் முனைவர் கோவி. செழியன், முனைவர் பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா, செய்தி தொடர்பு செயலாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா. எழிலன், சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, ஜி. சந்தானம், இ.ஆ.ப., (ஓய்வு), கனவு தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் சம்பந்தம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதனைத் தொடர்ந்து, கழகத்தின் தேர்தல் அறிக்கை குழுவின் முதல் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்! 2026 சட்டப்பேரவைத் தேர்தல்:

# தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, டிச. 23-**

**நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலுக்கு தி.மு.க. சார்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கையினை தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் நேற்று அண்ணா அறிவாலயத்தில் முதன் முறையாக கூடி விவாதித்து ஆலோசனை மேற்கொண்டனர்.**

**கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.**

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சட்டப் பேரவைத் தேர்தல் அறிக்கை தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் அனைவரும் பங்கேற்றனர்.

இது தொடர்பாக கடந்த 17ஆம் தேதி பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தேர்தல் அறிக்கை தயாரிக்க அமைக்கப்பட்ட குழு தொடர்பாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில், நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பொது நலச் சங்கங்கள் - வணிக அமைப்புகள் - இளைஞர்கள் - விவசாய அமைப்புகள் - தொழிலாளர் அமைப்புகள் - தோழமை இயக்கத்தினர் மற்றும் பொது மக்களின் நலன் விழையும் அமைப்புகளுடன் கலந்தாலோசித்திட தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டிருந்தது.

இதில் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் முனைவர் கோவி. செழியன், சொத்து பாதுகாப்புக்குழுச் செயலாளர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா, செய்தித் தொடர்பு செயலாளர் பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் இந்திய ஆட்சிப் பணி அலுவலர் (ஓய்வு), சுரேஷ் சம்பந்தம் ஒருங்கிணைப்பாளர், கனவு தமிழ்நாடு [Convenor, Dream Tamilnadu] ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்தத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் முதன் முறையாக நேற்று அண்ணா அறிவாலயத்தில் குழுவின் தலைவர் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் கூடி விவாதித்தனர்.

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் குழுவினர் சந்திப்பு!**

கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

---

### ‘டிட்வா’ புயலால் ஒத்தி வைக்கப்பட்ட

## பருவத் தேர்வுகள் ஜனவரியில் நடைபெறும்!

### அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு!

*சென்னை, டிச. 23 -*

டிட்வா புயலால் ஒத்தி வைக்கப்பட்ட பருவத் தேர்வுகள், ஜனவரியில் நடைபெறும் என அண்ணா பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.



அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான பருவத் தேர்வுகள் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடைபெற்றன.

அப்போது, டிட்வா புயல் காரணமாக தொடர் மழை பெய்ததால், சென்னை, திருவள்ளூர், சிவகங்கை, நெல்லை உள்ளிட்ட 15 மாவட்டங்களில், நவம்பர் 24, 25, 29 மற்றும் டிசம்பர் 2, 3 ஆகிய தேதிகளில் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டன. அன்றைய தினம் நடைபெறவிருந்த இளநிலை, முதுநிலை பொறியியல் படிப்புகளுக்கான பருவத் தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டன.

இந்நிலையில், டிட்வா புயலால் ஒத்தி வைக்கப்பட்ட பருவத் தேர்வுகள், ஜனவரி 20 முதல் 24ம் தேதி வரை நடைபெறும் என அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது.

---

### கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு

## சிறப்புப் பேருந்துகள்!

*சென்னை, டிச. 23 -*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், கிறிஸ்துமஸ் திருநாளை முன்னிட்டு வரும் 23, 24 ஆகிய தேதிகளில் வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



அதன்படி, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களுக்கு வரும் 23 ஆம் தேதி 255 பேருந்துகளும், வரும் 24ஆம் தேதி 525 பேருந்துகளும் இயக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வரும் 23, 24 ஆகிய தேதிகளில் 91 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னை மாதவரத்திலிருந்து வரும் 23, 24 ஆகிய தேதிகளில் 20 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வார இறுதியை முன்னிட்டு வரும் 28ஆம் தேதி சென்னை மற்றும் பெங்களூரு திரும்புவதற்கு வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அரசுப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

---

### ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளில்

## இந்தியாவில் தமிழ்நாடு முன்னிலை!



Tamil Nadu & UP have emerged as biggest contributors to 'Hotel & Restaurants' services gross value addition (GVA) in FY24. With over 54% contribution to total GVA, services sector is the largest and most dynamic component of Indian economy

TIMES BUSINESS

THE TIMES OF INDIA, CHENNAI | MONDAY, DECEMBER 22, 2025

Share of states (%) in 'Hotels & Restaurant' services GVA in 2023-24

TOP STATES

| Tamil Nadu | Uttar Pradesh | Maharashtra | Karnataka | Andhra Pradesh | Kerala | Delhi | West Bengal | Telangana | Rajasthan |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13.9 | 12.1 | 11.7 | 11.2 | 6.5 | 6.5 | 5 | 4.8 | 4.8 | 4.4 |

சென்னை, டிச. 23 -

ஹோட்டல் மற்றும் உணவக சேவைகளின் மொத்த மதிப்பு சேர்த்தலில் (Gross Value addition) 2023 - 2024 ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த இந்தியாவில் தமிழ்நாடு மிகப் பெரும் பங்களிப்பாளராக உருவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் 54 சதவிகிதத்தை கடந்த பங்களிப்புடன், சேவைத் துறை இந்தியப் பொருளாதாரத்தின் மிகப் பெரியதும் மிகச் சுறுசுறுப்பானதும் ஆன கூறாக உள்ளது.

மொத்த மதிப்பு சேர்த்தலில் உயரிய நிலையில் மாநில வாரியாக உள்ள பங்கு வருமாறு:-

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | – 13.9 | – சதவிகிதம் |
| உத்தரபிரதேசம் | – 12.1 | – சதவிகிதம் |
| மகாராஷ்டிரம் | – 11.7 | – சதவிகிதம் |
| கர்நாடகா | – 11.2 | – சதவிகிதம் |
| ஆந்திரபிரதேசம் | – 6.5 | – சதவிகிதம் |
| கேரளா | – 6.5 | – சதவிகிதம் |
| டெல்லி | – 5 | – சதவிகிதம் |
| மேற்கு வங்கம் | – 4.8 | – சதவிகிதம் |
| தெலுங்கானா | – 4.8 | – சதவிகிதம் |
| ராஜஸ்தான் | – 4.4 | – சதவிகிதம் |

---

# உயர் தொழில்நுட்பத் தொழிலாளர்களை உருவாக்கும் தமிழ்நாடு!

## ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டு!

**சென்னை, டிச. 23 -**

**நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், மேம்பட்ட உயர் தொழில்நுட்பத் தொழிலாளர்களை உருவாக்கப்பட்டு வருவதாக ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் பாராட்டி உள்ளது.**

‘ TN's strides in skilling’ எனும் தலைப்பில் தி டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் மேம்பட்ட, உயர் தொழில்நுட்பத் தொழில் துறைத் தேவைகளுக்குத் தொழிலாளர்களைத் தயார்படுத்துவதற்காக, சர்வதேச வழிமுறைகளை இணைத்துக் கொண்டு தமிழ்நாடு கூடுதல் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம், இந்தோ-ஜெர்மன் வர்த்தக சபை திறன் மேம்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஒரு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாகவும், கோவை மற்றும் சென்னை தாம்பரத்தில் உள்ள சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் சிறப்பு உற்பத்தித் திறன் மேம்பாட்டு மையங்களை அமைப்பதே இதன் நோக்கம் என்றும் இந்த மையங்கள், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற உலகத் தரத்திற்கு இணையான உற்பத்தித் திறன்களுக்கான ஒரு முன்மாதிரியாக உள்ளதாகவும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உயரிய தொழில் கொள்கை!**

இந்த திறன் மேம்பாட்டு மையங்களில் சிஎன்சி எந்திர வேலைப்பாடு, லேத் மற்றும் மில்லிங் செயல்பாடுகளின் குறுகிய கால, தொழில்துறைக்கு ஏற்ற திட்டங்களை அளிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. கோவையில் உள்ள ஜி.டி. நாயுடு அறக்கட்டளையால் நடத்தப்படும் ஜி.டி.டி.ஐ நிறுவனம், ஏற்கனவே டூல் மற்றும் டை இன்ஜினியரிங், மெக்கட்ரானிக்ஸ், துல்லிய எந்திரவியல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் டிப்ளோமா படிப்புகளையும், டூல் வடிவமைப்பு, மெக்கட்ரானிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பம் ஆகியவற்றில் முதுகலை டிப்ளோமாக்களையும் வழங்கி வருவதையும், ஜெர்மன் மற்றும் சுவிஸ் கல்வித் தரங்களின் அடிப்படையில் இந்த படிப்புகள் அமைந்துள்ளதாகவும் இதற்கான பாடத்திட்டம்





30 சதவீதம் தியரி மற்றும் 70 சதவீதம் செய்முறைப் பயிற்சி எனும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது.

இந்த பாடத் திட்டங்களை தொழிற் பயிற்சி மையங்கள் பள்ளி சார்ந்த தொழிற்கல்விப் பிரிவுகளுடன் இணைப்பதன் மூலம் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் திறமையான தொழில்நுட்ப தொழிலாளர்களையும், உயரிய நோக்கம் கொண்ட தொழில் கொள்கைகளை உருவாக்க முடியும் என தொழில் கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளதாகவும், இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அதிக முக்கியத்துவம் அளிக்கும் அரசு!**

திறன் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதை சுட்டிக்காட்டி உள்ள ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’, தமிழ்நாட்டின் மின் வாகனக் கொள்கை 2023ன் கீழ், மின்சார வாகன உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 10 சதவீதம் வரை திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க முடியும் என்றும் தளவாடங்களுக்கான உயர் திறன் மேம்பாட்டு மையத்திற்கான பாடத்திட்டத்தை தமிழ்நாடு அரசு வடிவமைத்து வருவதாகவும் ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளிதழ் வெளியிட்டுள்ள கட்டுரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.